**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*******

**ஊடக அறிக்கை**

**இலங்கைப் பொலிசார் இந்தியாவில் தொழில்துறை ரீதியான பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்**

இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 30 பேர்கள் கொண்ட ஓர் அணி இந்தியாவின், ஐதராபாத் நகரின் தேசிய தொழில்துறை ரீதியான பாதுகாப்பு அக்கடமியில் (NISA) தொழில்துறை ரீதியான ஒரு விரிவான பயிற்சியில் பங்குபற்றினர். இந்தப் பயிற்சி நெறி செப்டெம்பர் 24 இலிருந்து 28 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச கீர்த்தி கொண்ட NISA அக்கடமி 1990 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அது "தொழில்துறை ரீதியான பாதுகாப்பில் சிறந்த மையம்" ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. NISA தொழில்துறை மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு பாதுகாப்பு & முகாமைத்துவம், விமானப் பாதுகாப்பு & அனர்த்த முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை உருவாக்குவதில் நன்கு பெயர் பெற்ற நிறுவனம் என்பதுடன் உயர்ந்த தரத்திலான உடல் மற்றும் உள ரீதியிலான திறன், ஆழ்ந்த அறிவு மற்றும் ஆற்றல்களுடன் தொழில்சார் தகைமை கொண்டவர்களை உருவாக்குவதற்கும் உதவியுள்ளது.

இலங்கை ரூபாய்களில் 5 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையுடனான ஒரு அனுசரனையுடன், இந்தப் பயிற்சித் திட்டம் இந்திய அரசாங்கத்தினால் முற்றிலுமாக நிதியளிக்கப்பட்டது. பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர் மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஆகிய தரங்களிலிருந்தான 30 உத்தியோகத்தர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர். நிபுணர்களால் விடயம் சார்ந்து நடத்தப்பட்ட விரிவுரைகளுக்கு மேலதிகமாக, பயிலுனர்கள் துறை சார்ந்த நவீன உபகரணங்களைக் கையாள்வதற்கும் நேரடியான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் மக்கள் நலன் சார்ந்த தொடர்புகளை வலுப்படுத்தும் ஒரு சமிக்கையாக இந்திய அரசாங்கம் பயிலுனர்களுக்கு முழுமையான உபசரணை மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கியது.

குற்றச் சம்பவ முகாமைத்துவம் மற்றும் CCTV பகுப்பாய்வு, குற்றவியல் விளக்கத்தில் நிபுணத்துவ சாட்சியம், சைபர் இரசாயனப் பகுப்பாய்வு, VIP பாதுகாப்பு, போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் நிதிக் குற்றம் தொடர்பான ஒரு கருத்தரங்கு போன்ற ஏனைய பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த வருடம் இலங்கைப் பொலிசாருக்கு இந்தியாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

****

கொழும்பு
ஒக்டோபர் 11, 2018